# இதயபூர்வமாக உணர்ந்தறிதல்

அன்பார்ந்த நண்பர்களே,

சத்ரபதி சிவாஜியின் குரு, சுவாமி ராமதாசர் அவர்கள், இராமாயண கதாகாலட்சேபம் ஆற்றுவார் என்றும், அப்போது ஹனுமனே மாறுவேடத்தில் கலந்துகொண்டு அதனை கேட்க விழையும் அளவிற்கு தெய்வீகமான விதத்தில் விவரிப்பார் என்றும் சொல்லப்படுகிறது. அவ்வாறான நிகழ்வுகள் ஒன்றில், சீதா தேவியை சிறைபிடித்து மறைத்து வைத்த பின்னர், ஹனுமன் முதல்முறையாக சீதையை கண்ணுற்ற தருணத்தையும், அப்போது வெள்ளை நிற மலர்களால் சூழப்பட்ட ராவணனின் தோட்டத்தில் அவள் அமர்ந்திருப்பதையும் ராமதாசர் விளக்கிக்கொண்டிருந்தார்.

கதையை கேட்டுக்கொண்டிருந்த ஹனுமன், ஆழ்ந்திருந்த நிலையில் இருந்து திடுக்கிட்டு எழுந்தார். தனது மாறுவேடத்தை கலைத்து, எழுந்து நின்று, “ஐயா உங்கள் காலட்சேபங்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் கேட்டு வருகிறேன். ஏனெனில் என் பிரபுவைப் பற்றிய கதையை கேட்பதைவிட வேறு எதுவும் என்னை மகிழ்விக்காது. இருப்பினும் நீங்கள் கூறிய ஒரு விவரம் தவறானது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் விளக்கியபடி, ராவணனின் தோட்டத்தில் இருந்த மலர்கள் வெள்ளை நிறமன்று, அவை சிவப்பு நிறம். நானே அங்கிருந்து, எனது கண்களால் அவற்றை பார்த்தமையால், இந்த உண்மையை நான் நன்கறிவேன்” என்று கூறினார்.

ராமதாசரின் காலட்சேபத்தின் அழகு என்னவெனில், தெய்வீக தரிசனம் அவருக்கு அருளப்பட்டிருந்தது. பலர் செய்வதைப் போன்று, இராமாயணத்தை

அவர் வெறுமனே மீண்டும் எடுத்துரைக்கவில்லை; பகவத் கீதையில் சஞ்சயன் இருந்ததைப்போன்று, அவரே முன்னின்று அதை தரிசித்து, பின்னர் அவர் பார்த்ததை விவரித்தார். அப்படிப்பட்ட அவரது உணர்ந்தறியும் திறன்மீது பெற்றிருந்த நம்பிக்கையால், அந்த மலர்கள் நிச்சயமாக வெள்ளை நிறத்தில்தான் இருந்தன என்றும், ஹனுமன் இந்த விவரத்தை தவறாக நினைவில் கொண்டிருக்கக் கூடும் என்றும் ஹனுமனிடம் ராமதாசர் விளக்கமளித்தார்.

“அப்படியானால் இந்த விஷயத்தை ராமபிரானிடம் கொண்டு செல்லலாம்”, என ஹனுமன் உறுதியாக தெரிவித்ததால், அவரிடம் விரைந்து சென்றனர்.

ராமபிரான், அவர்கள் இருவரது கருத்தையும் கேட்டபின், “நான் அச்சமயம் அங்கிருக்கவில்லை. எனவே உங்களது பிரச்சினையை என்னால் தீர்க்க இயலாது” என்றார்.

ராமரின் பிரசன்னத்தில் இருந்து விலகிய அவர்கள், “அன்னை சீதையிடம் சென்று கேட்போம். அந்த மலர்கள் சிவப்பு நிறத்தில் இருந்தன என்பதை அவள் உறுதிப்படுத்த இயலும்” என்று ஹனுமன் கூறினார்.
சீதையிடம் விஷயத்தை எடுத்துரைத்தனர். அவள், “ராமதாசர் உண்மையைதான் பேசுகிறார். அந்த மலர்கள் வெண்மை நிறத்தில்தான் இருந்தன. அவை சிவப்பு நிறத்தில் இல்லை” என்றாள்.

“அது எப்படி சாத்தியமாகும்” என ஹனுமன் திகைப்புற்றார். “எனது கண்களால் நான் கண்ட அந்த மலர்கள் சிவப்பு நிறத்தில்தான் இருந்தன” என்றார்.

“ஆம், நீ அம்மலர்களை சிவப்பாகவே கண்டாய், ஏனெனில் நான் ராவணனின் கைதியாக இருந்ததை அப்போதுதான் நீ அறிந்ததால் உன் பார்வை கடுங்கோபத்தால் மறைக்கப்பட்டு இருந்தன. எனவேதான் வெள்ளை நிற மலர்களை நீ சிவப்பாக கண்டாய்”, என்று சீதை விளக்கினாள்.

நாம் மெய்யை மெய்யாக காண
இயலாததற்கான காரணம், தவறான
சிந்தனையையும், சரியற்ற புரிதலையும்
ஏற்படுத்துகின்ற, உள்ளார்ந்த சுமைகளாக
உள்ள — நமது சம்ஸ்காரங்களே ஆகும்.

ஹனுமன் மிகுந்த சினம் கொண்டிருந்ததால், கோபம் அவரது பார்வையை மாற்றியமைத்துவிட்டது. வெண்மையான மலர்கள்கூட எரியூட்டுவதாக தோன்றியது. தற்காலிகமாக, மாயை, பொய்த்தோற்றம் என்ற நிலைக்குள் அவர் பிரவேசித்திருந்தார். ஆகையால் மெய்யை பொய் எனவும், பொய்யை மெய் எனவும் உணர்ந்தார். அது சரியற்ற சிந்தனையால் உருவான, தவறாக புரிந்துகொள்ளும் நிலையாகும்.

அச்சத்துடன் பயணம் செய்யும் ஒருவர், இரவில் தனியாக நடந்துசெல்வதாக வைத்துக்கொள்வோம். சின்னஞ்சிறு மின்மினிப் பூச்சு இருளில் பறந்து செல்வதை

சேகரிக்கப்பட்ட இந்த உணர்ச்சிபூர்வ
நினைவுகள், நிகழ்வுகளை நாம்
புரிந்துகொள்ளும் விதத்தை
இப்போது வரையறுக்கின்றன. இது,
வண்ணம் பூசப்பட்ட கண்ணாடி
வில்லைகள் வழியாக உலகை
பார்ப்பதற்கு ஈடாகும்.

கண்டு, அதனை பேய் என எண்ணக்கூடும், பின்னர் அவர் ஒரு கயிற்றை கண்டு, பாம்பு என தவறாக எண்ணுவார். அதேபோன்று வேறொரு நபர், அவரது மேலாளருடன் நள்ளிரவு வரை கைபேசியில் பேசிக்கொண்டிருப்பதை பார்த்த அவரது மனைவி, அவர் நம்பிக்கை துரோகம் செய்வதாக முடிவெடுக்கலாம். இரண்டு விஷயங்களிலும், சூழ்நிலையின் நிதர்சனத்தைக் காணாமல், தவறான சிந்தனை எனும் சல்லடைகள் வழியாக உணர்ந்தறியப்படுகிறது. இரண்டு சந்தர்ப்பங்களும் அறியாத விஷயங்களை கொண்டே தொடங்குகின்றன, அறியாத ஒளியின் மூலஆதாரம், அடையாளம் அறியப்படாத கயிறு, தொலைபேசியில் அறிந்திடாத நபர். ஒவ்வொரு தருணமும் நாம் அறிந்திராத விஷயங்களை எதிர்கொள்கிறோம். ஆனால் அது பொய்த் தோற்றம் வளர்வதற்கு, இடமளிக்க வேண்டிய அவசியமில்லை.

இந்த மாயை தோன்றுவதற்கான காரணத்தை பாபூஜி மகராஜ் கண்டறிந்துள்ளார். நாம் மெய்யை மெய்யாக காண இயலாததற்கான காரணம், தவறான சிந்தனையையும், சரியற்ற புரிதலையும் ஏற்படுத்துகின்ற, உள்ளார்ந்த சுமைகளாக உள்ள — நமது சம்ஸ்காரங்களே ஆகும்.

உண்மையான பாரபட்சமற்ற பார்வை,
உணர்ச்சிபூர்வ மட்டத்தில் அர்த்தத்தை
புரிந்துகொள்வதோ அல்லது மதிப்பீடு
செய்வதோ இன்றி, கூட்டாமலும் அல்லது
குறைக்காமலும், உள்ளதை உள்ளபடி காண்கிறது.
எல்லா வடிகட்டிகளும் அகன்ற பின்னர் காட்சி
வெளிப்படும், நமது சாஸ்திரங்கள் இந்த தூய
காட்சியையே தரிசனம் என குறிப்பிடுகின்றன.

சம்ஸ்காரங்கள் என்பவை உணர்ச்சிபூர்வ தாக்கத்தை ஏற்படுத்தும் அனுபவங்களின் பதிவுகளாகும். அவை நமது உணர்வுறுநிலையின் மீது படிந்து, ஆழ்மனதில் தங்கி நமது வாழ்க்கையில் ஆழமான தாக்குதலை ஏற்படுத்தி, தற்போதைய நிதர்சனத்தை, கடந்த கால அனுபவங்கள் என்னும் கண்ணாடி வில்லையைக் கொண்டு காணச் செய்கிறது. நமது பழைய உணர்ச்சிகளும், எண்ண வடிவங்களும், தற்போதைய நிதர்சனத்தின் மீது மேலெழுந்தவாறு திணிக்கப்படுவதால், அதன் விளைவாக பாரபட்சமாக நடந்துகொள்கிறோம். சேகரிக்கப்பட்ட இந்த உணர்ச்சிபூர்வ நினைவுகள், நிகழ்வுகளை நாம் புரிந்துகொள்ளும் விதத்தை இப்போது வரையறுக்கின்றன. இது, வண்ணம் பூசப்பட்ட கண்ணாடி வில்லைகள் வழியாக உலகை பார்ப்பதற்கு ஈடாகும்.

*விசார்ட் ஆஃப் ஓஸ்* என்ற திரைப்படம் என் நினைவிற்கு வருகிறது, அதில் *ஓஸ்* நகரில் உள்ள அனைத்தும், மரகதப் பச்சை நிறத்தில் இருப்பதாக நம்பப்படுகிறது, ஆனால் அது மாயத்தோற்றம் மட்டுமே. *ஓஸ்* நகரமும், மற்ற நகரங்களைப் போன்றதுதான். பசுமையான மாயத்தோற்றம் நிலைத்திருப்பதற்காக, அந்நகரில் வசிக்கும் ஒவ்வொருவரிடமும் பச்சை நிற வில்லைகளை கொண்ட மூக்குக்கண்ணாடி கொடுக்கப்பட்டிருந்தது, அனைவரும் அக்கண்ணாடியை எந்நேரமும் அணிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அந்த வண்ணம் பூசப்பட்ட வில்லைகள், அந்நகர வாசிகளுக்கு பச்சை நிறத்தில் நகரம் இருப்பதை போன்றதொரு பொய்யான பதிவை உருவாக்கியது.

அது ஒரு கற்பனை கதை, ஆனால் நமது நிஜ வாழ்க்கை காட்சிகளும் அவ்வாறே திரிக்கப்படுகின்றன. நமது வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் பாரபட்சங்கள் மிக மோசமானவை, ஏனெனில் *ஓஸ்* நகர குடிமக்களுக்கு பொய்த்தோற்றத்தை அளித்த ஒற்றை கண்ணாடிகளைப் போல அல்லாமல், நமது உணர்ந்தறியும் திறன்

பல்வேறு வடிகட்டிகளால் மறைக்கப்பட்டு இருக்கின்றன. ஒற்றை கண்ணாடியை எளிதில் நீக்க முடியும், ஆனால் நம்முள் ஆழமாக பதிந்த வடிகட்டிகளை, நமது ஆன்மாவானது உணர்வுறுநிலையுடன் சேர்த்து, ஒரு வாழ்க்கையில் இருந்து அடுத்த வாழ்க்கைக்கு சுமந்து செல்கின்றது. நாம் அணிந்துள்ள "கண்ணாடிகள்" ஒரே ஒரு நிறம் உடையதல்ல, அதன் வில்லையில் பல வண்ணங்கள் படிந்துள்ளன, அவை கிட்டத்தட்ட ஒளி ஊடுருவ முடியாததாக மாறிவிட்டன. அதைவிட, அந்த வடிகட்டிகள் முன்அறிகுறி ஏதுமின்றி சட்டென்று வெளிப்படுகின்றன. மெய்மை எனும் ஒளி நமது உணர்வுறுநிலையில் நுழைய முடியாமல் தடை செய்யப்படும்போது, நாம் இருளில், ஒருவகையான நரகத்தில் வாழ்கிறோம்.

சம்ஸ்காரங்கள் நம்மை பாரபட்சத்துடன் உணர்ந்தறியச் செய்து, விஷயங்களை நல்லது அல்லது கெட்டது என மதிப்பீடு செய்திட நம்மை தூண்டுகின்றன. குறிப்பிட்ட சில விஷயங்களே அழகானவை, மற்றவை அழகற்றவை என்றும், சில விஷயங்களே புனிதமானவை, மற்றவை புனிதமற்றவை என்றும் தீமானிக்கிறோம். புனிதத்தன்மையும், அழகும் எல்லா இடங்களிலும் இருக்கிறது என்ற உண்மையை மறந்துவிடுகிறோம். மதிப்பீடு என்பது, பார்ப்பவரின் கண்ணோட்டத்தை பொறுத்தே உள்ளது. அதனை நாம் மெய்மையின் மீது சுமத்த முயல்கிறோம். உண்மையான பாரபட்சமற்ற பார்வை, உணர்ச்சிபூர்வ மட்டத்தில் அர்த்தத்தை புரிந்துகொள்வதோ அல்லது மதிப்பீடு செய்வதோ இன்றி, கூட்டாமலும் அல்லது குறைக்காமலும், உள்ளதை உள்ளபடி காண்கிறது. எல்லா வடிகட்டிகளும் அகன்ற பின்னர் காட்சி வெளிப்படும், நமது சாஸ்திரங்கள் இந்த தூய காட்சியையே தரிசனம் என குறிப்பிடுகின்றன.

பலர் தரிசனம் என்பதை ஒரு புனிதரை கணநேரம் காண்பது என்ற வரையறைக்கு உட்பட்ட விதத்தில் புரிந்துவைத்துள்ளனர். ஆனால் ஸ்ரீகிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் அவரை பலர் கண்டபோதும், ஒருவரும் அவர் யார் என்பதை காணவில்லை. எனவே, உண்மையான அர்த்தத்தில் அவரது தரிசனத்தை பெற்றவர் யார்? இது பாபூஜியின் மேற்கோளை எனக்கு நினைவூட்டுகின்றது: "பலர் என்னை காண வருகின்றனர், ஆனால் எவரும் உண்மையில் என்னை காண்பதில்லை".

உண்மையான உயர் சுயத்தின்
தரிசனத்தை பெற, அகங்காரத்தால்
சேகரித்து வைக்கப்பட்டுள்ள
பொய்யான அடையாளங்களை நாம்
விட்டுவிட வேண்டும்.

பலர் ஸ்ரீகிருஷ்ணரை வெறுத்தனர். ஒருசிலர் மட்டுமே அவரை நேசித்தனர். துரியோதனன் அவரை வெறும் மாயாவி என்றழைத்து, அவரை குறைவாக மதிப்பிட்டான். அர்ஜுனன் அவரை ரசித்தான், ஆனால் அவரை ஒரு நண்பன் என்ற வரையறைக்குள் பார்த்தான். ஸ்ரீகிருஷ்ணர் மேல் அளவிடற்கரிய அன்பையும் போற்றுதலையும் கொண்ட ராதாவும், அவர் அகிலம் ஆள்பவர் என அவரது முழு ஆற்றலையும் அறிந்துணரவில்லை. அவரை கண்ட ஒவ்வொருவரும் வெவ்வேறான உணர்தலை கொண்டிருந்தனர். முழுமையான சத்தியத்தை யாரும் காணவில்லை.

ஏனெனில் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். இவ்வுலகில் உள்ள பல கோடிக்கணக்கான மக்களில், எத்தனை எத்தனை பதிவுகளை நாம் ஒட்டுமொத்தமாக கொண்டிருக்கிறோம், பூமியில் நமக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட தருணத்தில் எவ்வளவு வரையறைகளை கொண்டுள்ளோம், மேலும் எவ்வளவு தனிமனித கண்ணோட்டங்கள் உள்ளன என்பதை கற்பனைசெய்து பாருங்கள். பொதுவாக, இதன் விளைவாக ஒத்துப்போகாத நிலையும், ஒற்றுமையின்மையும்தான் ஏற்படும்.

நாம் எப்போதுமே இப்படிப்பட்டவர்கள் அல்ல. தொடக்கத்தில், ஒவ்வொரு உணர்வுநிலையும் ஒரே மாதிரியாகவே இருந்தது. மெய்மையின் தூய காட்சி பொதுவாக நிலைகொண்டிருந்தது. சரியற்ற சிந்தனையால் வேறுபாடுகள் உருவாக ஆரம்பித்தன, பின்னர் நமது தனிப்பட்ட சிறு உலகங்களை நாம் உருவாக்கத் தொடங்கினோம். நாம் உருவாக்கிய அச்சிறு உலகங்களை, பாபூஜி, தீவுகள் என குறிப்பிட்டார். அவை ஒவ்வொன்றும் மற்றொன்றிடமிருந்து விலகியே இருக்கும், ஒற்றுமையிலிருந்து விலகி, தனித்தன்மையை நோக்கி, தனிமைப்படுத்தப்பட்டு, அகங்காரத்தின் வழிநடத்துதலால் ஜீவித்திருக்கும்.

தனிநபரின் விதி என்ற மரங்கள், சம்ஸ்கார
விதைகளிலிருந்து, அகங்காரம் எனும்
மண்ணில் வேர்விட்டு வளர்கின்றன.
நமது சம்ஸ்காரங்கள் நம் இதயத்தின்
உள்ளுணர்வினை உருவாக்குகின்றன,
அதனை நிறைவேற்றும் விதமாக மனம்
செயலாற்றுகின்றது.

மனதின் செயல்பாடுகள் *வ்ருத்தி* எனப்படுகின்றன. நமது *வ்ருத்தி*, *ப்ரவ்ருத்தி* எனப்படுவதை, அதாவது மனோபாவங்களை இயக்குகின்றது. *வ்ருத்தி*, *ப்ரவ்ருத்தி*, இவை இரண்டும் ஒன்றிணைந்து ப்ரக்ருதி - அதாவது நமது இயல்பை வடிவமைக்கின்றன. இதற்கு மூன்று குணங்களின் (*சத்வ, ரஜஸ், தமஸ்*) பண்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

அகங்காரம், அதன் உண்மையான இயல்பில், சுயநலத்தை மையமாக கொண்டது, அதன் ஜீவிதத்தையே அது நாடிக்கொண்டிருக்கும். அகங்காரத்தின் மிகப்பெரிய பயம் அதன் அடையாளம் அழிக்கப்படுதலே ஆகும். அதன் கண்ணோட்டத்தில், அகங்காரத்தின் அழிவைவிட பௌதீக மரணம் மேலானது. அதன் இருப்பை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதில் முழு கவனமாக இருந்து, தான் இன்னும் நீடிப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள, ஒரு நிலைக்கண்ணாடியில் பார்த்துக்கொண்டு இருப்பதைபோல், அகங்காரம் எப்போதும் அதனைக் காண விரும்புகிறது.

அதற்கென உருவம் இல்லாதபோது அகங்காரம் எவ்வாறு அதனைக் காணும்? இதற்கான பதில், அறிந்துகொண்ட பொருட்களுடன் அது தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும். அது அறிந்து கொள்பவருக்கு வெளிப்புற விஷயத்திலும், உணரக் கூடியதிலும் உள்ளது. வெளிப்புறமாக உள்ள ஒன்றை சுட்டிக்காட்டி, “நான் அது தான்”, என்று உறுதியளித்து, அது திருப்தி அடைந்துவிடும். இவ்வகையில், அது மனதுடன், உடலுடன் அல்லது மனித அமைப்பிற்கு வெளியில்கூட, உதாரணமாக கலாச்சாரம், மொழி, சுவை, உடைமை போன்றவைகளுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும்.

பாபூஜி ஒருமுறை கடிதம் ஒன்றிக்கு பதில் எழுதுகையில் இவ்வாறு எழுதினார்: “மஹாபுருஷர்களின் (ஞானிகள்) தரிசனத்தை நீங்கள் பெற நினைப்பது நல்லதுதான். உங்கள் சுயத்தின் தரிசனத்தை பெற முயற்சிப்பது அதைவிட சிறந்ததாகும்”. உண்மையான உயர் சுயத்தின் தரிசனத்தை பெற, அகங்காரத்தால் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பொய்யான அடையாளங்களை நாம் விட்டுவிட வேண்டும். ஆனால் அகங்காரம் அதன் பொய்யான அடையாளங்களை மிக அழுத்தமாக பற்றிக்கொண்டுள்ளது. அவை அச்சுறுத்தப்படும்போது,

## அகங்காரத்தின் அடையாளங்கள், உண்மையான அடையாளத்தை மறைக்கும் திரைகளாகும்.

அது ஆக்ரோஷமாக எதிர்க்கக் கூடும். உங்களின் ஒரு பகுதியாக நீங்கள் கருதிக்கொண்டிருக்கும் ஏதேனும் ஒரு விஷயம் — உங்களது மதம், நாடு, சமூகம், குடும்பம் போன்றவை, விமர்சிக்கப்படும்போது, நீங்கள் எவ்வாறு உணர்வீர்கள் என உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். அந்த உணர்வின் வலிமையானது, அகங்காரத்தின் அடையாளங்கள் தீவிரமடைந்து இருப்பதை அறிவதற்கான ஒரு குறிப்பாகும். அகங்காரத்தின் அடையாளங்கள், உண்மையான அடையாளத்தை மறைக்கும் திரைகளாகும்.

பிடிவாதமான அகங்காரங்களே ஒற்றுமையை அழிப்பவைகளாகும். ஒரு குழுவில் பணியாற்றும்போது, மற்றவர்கள் உங்களிடமிருந்து வேறுபட்ட ஒரு விதத்தில் ஒன்றை செய்ய விரும்பலாம். உங்களது சுய கருத்துக்களை நீங்கள் மிகவும் பற்றிக்கொண்டிருந்தால், மற்றவர்களிடமிருந்து வரும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் கூட, தனிப்பட்ட அச்சுறுத்தல்களாகத் தோன்றும். குழுவில் உள்ள ஒவ்வொருவரும் “என் வழி அல்லது உயர்வான வழி” என்ற பாணியை பின்பற்றி வேலைசெய்வதாக எண்ணிப்பாருங்கள். அதன் விளைவு எவ்வாறு இருக்கும் என எண்ணிப்பாருங்கள். நாம் வளைந்து கொடுத்து, அகங்கார மோதல்களை தவிர்க்கும்போது, மாறுபட்ட கண்ணோட்டங்கள் ஆரோக்கியமானவையாக இருக்கும்.

அகங்காரம் நிறைந்த பாணியில் பணியாற்றுவது, நம்மை தெய்வீக ஆற்றல் பாய்வதற்கான வழித்தடமாக மாற்றியமைக்கின்ற மாஸ்டரின் பணிக்கு தடையாக விளங்கும். தெய்வீக ஆற்றலின் பிரவாகம் நம்முள் ஒருவித எதிர்ப்பை சந்திக்கும்போது, சஞ்சலம் ஏற்படுகின்றது. தியானத்தின்போது “சட்டென ஏற்படும் உடல் நடுக்கம்”, உடலமைப்பில் நிகழ்கின்ற எதிர்ப்பின் ஒரு அறிகுறியாகும்.

அகங்காரமும் சம்ஸ்காரமும் இணைந்தே செயல்படுபவை. நாம் உணர்ச்சிபூர்வமாக எதிர்வினை ஆற்றும்போது சம்ஸ்காரங்கள் உருவாகும். நாம் எதிர்வினை ஆற்றுவதற்கு காரணமான மூலக்கூறு நமது அகங்காரம்தான், அதுவே சம்ஸ்காரம் உருவாவதை தூண்டுகிறது. அகங்காரம் ஏன் எதிர்வினை ஆற்றுகிறது? அதை அடையாளப்படுத்தும் விஷயங்களில் ஒன்று மேம்படுத்தப்படும்போதோ அல்லது

அச்சுறுத்தப்படும்போதோ, அது எதிர்வினை ஆற்றுகிறது. இந்த எதிர்ச்செயல் விருப்பம் அல்லது விருப்பமின்மை என ஏதோ ஒரு வடிவில் வெளிப்படும். அந்த எதிர்ச்செயலால் உருவாகும் நேர்மறை அல்லது எதிர்மறை உணர்ச்சி, பின்னர் ஒரு பதிவாக மாறுகிறது.

உறுதுணைபுரியும் விதமாக, அகங்காரம் அடையாளப்படுத்திக் கொண்ட விஷயங்களை, சம்ஸ்காரங்கள் நிர்ணயிக்கின்றன. அகங்காரமும் சம்ஸ்காரமும், பின்னர், மாயையின் தோற்றத்திற்கு இணை-காரணிகளாக ஆகின்றன. அதன்மூலம் நமது உணர்ந்தறியும் திறன் வடிகட்டப்பட்டு, மெய்மை மீதான நமது காட்சி திரித்துவிடப்படுகிறது.

தனிநபரின் விதி என்ற மரங்கள், சம்ஸ்கார விதைகளிலிருந்து, அகங்காரம் எனும் மண்ணில் வேர்விட்டு வளர்கின்றன. நமது சம்ஸ்காரங்கள் நம் இதயத்தின் உள்ளுணர்வினை உருவாக்குகின்றன, அதனை நிறைவேற்றும் விதமாக மனம் செயலாற்றுகின்றது. மனதின் செயல்பாடுகள் *வ்ருத்தி* எனப்படுகின்றன. நமது *வ்ருத்தி*, *ப்ரவ்ருத்தி* எனப்படுவதை, அதாவது மனோபாவங்களை இயக்குகின்றது. *வ்ருத்தி*, *ப்ரவ்ருத்தி*, இவை இரண்டும் ஒன்றிணைந்து *ப்ரக்ருதி* — அதாவது நமது இயல்பை வடிவமைக்கின்றன. இதற்கு மூன்று குணங்களின் (*சத்வ, ரஜஸ், தமஸ்*) பண்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

நமது இயல்பின் பண்புகளை பொறுத்தவரை, குறிப்பிட்ட செயல்பாடுகளை நாம் மீண்டும் மீண்டும் செய்கிறோம். உணவுப் பிரியர் உணவு விடுதிகளுக்கு சென்றுகொண்டிருப்பார். நீர் சறுக்கு விளையாடுபவர் அலைகளை நாடிச் செல்வார். சினிமா பித்தன் திரைப்படங்களுக்கு சென்றுகொண்டிருப்பார். ஒவ்வொரு நபரின் இயல்பிற்கு ஏற்றவாறு, அத்தகைய செயல்பாடுகள், குறிப்பிட்ட சம்ஸ்கார வகைகளை சேகரித்துக்கொள்ள துணைபுரிகின்றன. ஒரு பிறவியிலிருந்து அடுத்த பிறவி வரை, ஓயாத செயல்பாடும், சம்ஸ்காரங்களின் குவியலும், நமது இயல்பை பெரிதும் வரையறுக்கின்றன. இதையே நாம் *ப்ராரப்த* (விதி) என அறிகின்றோம்.

சம்ஸ்காரங்களை உருவாக்கிக் கொள்ளாமல்,
உன்னதமான செயல்பாடுகளை மேற்கொள்ள
அனுமதிக்கின்ற ஒரு வாழ்க்கைமுறையை,
நாம் அமைத்துக்கொண்டு உயர்வடைவதற்கு
தேவைப்படும் உள்முக பயிற்சியை,
சகஜ மார்க்கம் நமக்கு அளிக்கின்றது.


நமது தனிப்பட்ட விதியின் படைப்பாளிகள் நாம் தான். இருப்பினும், தெய்வீக விதி என்ற ஒன்றும் உள்ளது – தனிப்பட்டமுறையில் நாம் உருவாக்கி வைத்துள்ள நமது உலகை நாம் முடிவிற்கு கொண்டுவந்து, நமது சுய பிரளயத்தை செயல்படுத்திக் கொண்ட பின்னரே, அந்த விதியைப் பற்றி நாம் உணரமுடியும்.

இந்த நோக்கத்திற்காகவே மகரிஷி பதஞ்சலி, யோக மார்க்கத்தை வழங்கியுள்ளார். அதன்மூலம் *வ்ருத்தி* எனப்படும் எண்ண அலைகளை, நாம் தவிர்க்க இயலும். இல்லையெனில் அவை நமது விதியை வடிவமைத்து, மாயை எனும் சுழலில் சிக்க வைத்து, அதிலேயே நாம் உழன்றுகொண்டிருக்க செய்துவிடும். இதே நோக்கத்திற்காகவே, பூஜ்ய பாபூஜி அவர்கள், நமது மனதிலுள்ள எண்ண அலைகளை நீடிக்கச் செய்யும் சம்ஸ்காரங்களை நீக்குவதற்கான வழிமுறைகளை நமக்கு தந்தருளியுள்ளார். எண்ண அலைகளைத் தடுப்பது என பொருள்படும், *சித்த வ்ருத்தி நிரோத*, என்பது ஒருவகையில் யோக நிலையாகும். எண்ண அலைகளை ஆதரிப்பது ஒருபோதும் நமக்கு உதவாது. எனவே அது யோகா அல்ல, *அ-யோக்ய*, அதாவது உதவாதது.

துரதிர்ஷ்டவசமாக, அகங்காரத்தின் மனோபாவம் யாதெனில், அதன் உருவாக்கத்தை பாதுகாத்து, *வ்ருத்தி, ப்ரவ்ருத்தி, ப்ரக்ருதி* மற்றும் *ப்ராரப்த* ஆகியவற்றுடன் அடையாளப்படுத்திக் கொள்வதுதான். இது மாற்றத்தை சாத்தியமற்றதாக ஆக்குகிறது. அன்பிற்குரிய சாரிஜி அவர்களின் கூற்றுப்படி, “ஒரு முட்டாள், தவறான செயலை செய்துமுடித்த பின்னரே, ஒருவேளை அதனை உணரக்கூடும்; ஒரு புத்திசாலி ஒன்றை செய்கின்றபோதே அவனது தவறை உணர்கிறான்; ஒரு ஞானி முன்னதாக தவறுகளை அறிந்து, அவற்றை தவிர்க்கிறார்”, என கூறுவது வழக்கம்.

அப்படியானால், தனது தவறுகளை கண்ட பின்னும், தான் செய்ததே சரி என பிடிவாதமாக நடந்துகொள்ளும் ஒரு நபரை என்னவென்று வகைப்படுத்துவது?

உணர்ச்சிபூர்வ கொந்தளிப்பு எற்படும்போதும்
பாதிக்கப்படாமல் இருந்திட, மனதிற்கும்
இதயத்திற்கும் ஒரு மழைஅங்கியாக இருந்து
உதவக்கூடியது எது? அது, இறைவனின்
மீதான அன்பில் முழுவதும் நனைந்துள்ள
‘நிலையான நினைவு’ என்ற மேல்அங்கிதான்.




அப்படிப்பட்ட நபர் எவ்வாறு தன்மைமாற்றம் அடைய முடியும்? தனது உருவாக்கங்களில் முனைப்புடன் இருக்கும் ஒரு நபர், எவ்வாறு சுய பிரளயத்தை செயல்படுத்த இயலும்? இது, செம்பை தங்கமாக மாற்றுவதைப் போன்றது, அது ஒருபோதும் நடக்காது அல்லவா? நம்மையே மாற்றிக்கொள்வதில் நாம் ஏன் வருத்தத்திற்குரிய வகையில் தோல்வி அடைகிறோம் என்பதை இது விளக்குவதாக உள்ளது. பாபூஜி அவர்களின், 23 வட்டங்கள் கொண்ட வரைபடத்தில், அகங்கார வட்டங்கள், ஏன் மாயை ஸ்திதிகளுக்கு உறுதுணையாக உள்ளன என்பதையும் இது விளக்குகின்றது.

சம்ஸ்காரங்களை உருவாக்கிக் கொள்ளாமல், உன்னதமான செயல்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்கின்ற ஒரு வாழ்க்கைமுறையை, நாம் அமைத்துக்கொண்டு உயர்வடைவதற்கு தேவைப்படும் உள்முக பயிற்சியை, சகஜ மார்க்கம் நமக்கு அளிக்கின்றது. சம்ஸ்காரங்களின் சுமையை நீக்குவது எளிதானது. ஒவ்வொரு நாளும் நாம் சேர்த்துக்கொண்ட சம்ஸ்காரங்கள், மாலைநேர சுத்திகரிப்பில் நீக்கப்படுகின்றன. இந்த பிறவியில் சேர்த்துக் கொண்ட கடந்தகால சம்ஸ்காரங்கள் தனிஅமர்வுகளின் போது பிரிசெப்டரால் நீக்கப்படுகின்றன. முற்பிறவிகளில் இருந்து வந்த சம்ஸ்காரங்கள், *பண்டாரா* எனப்படும் பிறந்தநாள் விழாக்களிலும், கூட்டு சத்சங்கங்களிலும், மாஸ்டரின் பௌதீக பிரசன்னத்தில் நாம் அவருடன் இருக்கும்போதும், மேலும், ஒரு அப்யாசி பக்தியுடன் இருந்து *லயாவஸ்தா* என்னும் ஆழ்ந்துபோகும் நிலையை அடையும்போதும், எந்த தருணத்திலும் நீக்கப்படும்.

சம்ஸ்காரங்கள் உருவாவதை தடுப்பதுதான் பெரும் சவாலாகிறது. இந்த உலகில் நாம் வாழ்ந்துகொண்டே பதிவுகளை தவிர்ப்பது என்பது, நிலக்கரி சுரங்கத்தில் இருந்துகொண்டு கறை ஏற்படாமல் தவிர்ப்பதைப் போன்றது அல்லது புயல் மழையில் நடந்துகொண்டு ஈரமாகாமல் இருப்பதைப் போன்றது. மழையை நாம் தவிர்க்க முடியாது, ஆனால் நீர்புகா மழைஅங்கியை அணிந்துகொண்டு, ஈரமாகாமல் நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். உணர்ச்சிபூர்வ கொந்தளிப்பு எற்படும்போதும் பாதிக்கப்படாமல் இருந்திட, மனதிற்கும் இதயத்திற்கும் ஒரு மழைஅங்கியாக இருந்து உதவக்கூடியது எது? அது, இறைவனின் மீதான அன்பில் முழுவதும் நனைந்துள்ள 'நிலையான நினைவு' என்ற மேல்அங்கிதான்.

நிலையான நினைவு என்பது தனிச்சிறப்பு கொண்ட ஒரு வடிகட்டியாகும். அது, பதிவுகள் நமது உணர்வுநிலையை கறைப்படுத்தும் முன்பாக அவற்றை நீக்கிவிடும். நிலையான நினைவின் 'பணிவு' என்ற பாதுகாப்பான மேற்கூறை, அகங்காரத்தை வடிகட்டிவிடும். பாரபட்சத்தின் விளைவுகளில் இருந்து நம்மை பத்திரமாக வழிநடத்தும். இதனால் தெய்வீக இலக்கு நமது பார்வையில் தெளிவாக நிலைத்திருக்கும். நமது உணர்ந்தறியும் திறன், நம்மை படைத்தவருக்கான அன்பில் இதயபூர்வமாக ஆழ்ந்து இருக்கும்போது, உலகாயத விஷயங்களும், பொய்த் தோற்றங்களும் கூட தெய்வீகமாகவும், அசாதாரணமானதாகவும் மாறும். மூலஆதாரமும், அதிலிருந்து வெளிப்படும் விஷயமும் ஒன்றேதான் என்பதால், கடவுள் தெய்வீகமானவர் எனில், அவரது படைப்பும் தெய்வீகமானதுதான். இவ்வாறு அனைத்துமே தெய்வீகமாகிறது.

அன்புடனும் மரியாதையுடனும்,

கம்லேஷ்

## பூஜ்யஸ்ரீ பாபூஜி மகராஜ் அவர்களின்

123வது பிறந்தநாள் ஆண்டு விழா

29, 30 ஏப்ரல் மற்றும் 1 மே 2022

heartfulness™
advancing in love